
வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
சின்மயானந்தகுரு...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவரின் சின்மயானந்த குரு

## அருள்நிதி

## மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1.அறிவில் முழுமை

2.தெளிவாக காணவைக்கும் பிரம்மஞானம்

3.அறுகுண சீரமைப்பில் அமைதி

4. சிவநிலையை சீவனிலே உணர்ந்து கொண்டால்.

5.பிறவி தொடரும் காரணம் என்ன?

6.பேரின்ப வீட்டில் நன்றாக உறங்கலாம்

7 அடிமை கொண்ட திருவருளின் திறம்

8. வழிகாட்டிய வள்ளல்

9.முழுமைப் பேறடைந்தால் வீடுபேறு எய்தலாம்.

10 என்னை ஆட்கொள்வாயா?

11.ஞானம் முதிராமல் வீடு கைகூடுமோ?

## சின்மயானந்த குரு

தாயுமானவர் சின்மயானந்த குரு என்ற தலைப்பில் 176 வரிகளில் பதினொரு பாடல்களை பாடியுள்ளார்.

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் “சித்தாந்த முக்திதரும் முதற்பொருளே! திருச்சிராப்பள்ளியில் உயிர்கள் உய்யும் பொருட்டு

எழுந்தருளி இருக்கும் தட்சிணாமூர்த்தியே! ஞான ஆனந்தமயமான குருவே!" என்று குருவைப் போற்றுகிறார்.

# 1. அறிவில் முழுமை

"ஆராத முத்தியினது ஆவேச ஆசைக் கடற்குள் மூழ்க" என்று தாயுமானவர் முக்தி பற்றி இந்தப்பாடலில் சொல்லும் போது கஜேந்திர மோட்ச கதைதான் நம் நினைவுக்கு வருகிறது.

இந்த கஜேந்திர மோட்சமானது பாகவத புராணத்தில் எட்டாவது ஸ்கந்தத்தில் வரும் பகுதி. இதை பரீட்ஷித்து மன்னருக்கு ஸ்ரீசுகர் அருளினார்.

"கஜேந்திரன் என்னும் பெயர் கொண்ட யானை துமதா என்னும் வனத்தில் வாழ்ந்து வந்தது. அந்த துமதா வனத்தை வருண பகவான் திரிகூடமலை என்னும் இடத்தில் உருவாக்கினார். கஜேந்திரன் தனது யானை கூட்டத்தில் வாழ்ந்து அக்கூட்டத்தின் தலைவனாகவும் விளங்கியது.

ஒரு நாள் தாகம் தணிக்க தனது யானை கூட்டத்துடன் நீர் நிலையை நோக்கி சென்றது.

அப்பொழுது அந்த குளத்தில் வாழும் ஒரு முதலை கஜேந்திரனின் கால்களை பற்றியது.

முதலையின் வாயில் அகப்பட்ட கால்களுடன் உயிருக்கு போராடிய கஜேந்திரனை மற்ற யானைகள் காப்பாற்ற முயன்று தோல்வியுற்றன.

தனது இறுதி காலம் நெருங்குவதை உ ண்ர் ந்த யானை, ஒரு தாமரை மலரை தனது தும்பிக்கையால் பற்றி வான் நோக்கி ஆதிமூலமே என பெருமாளை அழுது வேண்டியது.

தனது பக்தனின் துயர் துடைக்க விரைந்து வந்த விஷ்ணு, சுதர்ஷன சக்கரத்தால் முதலையின் தலையை துண்டித்து யானையை விடுவித்து மோட்சம் அளித்தார்.



இதில் யானையாக கூறப்பட்ட கஜேந்திரன் தனது பூர்வ ஜென்மத்தில் அரசன் இந்திர துய்மனாக நாட்டை ஆண்டு வந்தார். இவர் ஒரு சிறந்த விஷ்ணு பக்தனாக விளங்கினார்.

ஆனால் அகந்தை இவர் கண்களை மறைக்க, அகஸ்திய முனிவரின் சாபத்தால் யானையாக பிறப்பெடுத்து, பின் இறைவனால் அகந்தை ஆணவம் அழிக்கப்பட்டு, மோட்சம் கிடைக்கப்பெற்றார்.

முதலையின் பிடியில் இருந்த கஜேந்திரன், விஷ்ணுவை நோக்கி துதித்த பாடல், கஜேந்திர ஸ்துதியாக போற்றப்படுகிறது. இது சஹஸ்ரநாமத்தில் முதல் ஸ்லோகம்.

முதலையாக சாபம் பெற்றது ஒரு கந்தர்வன். ஒரு முறை முனிவர் தேவலா அவரை காண வந்தார். இருவரும் சேர்ந்து நீராடினர்.

முனிவர் சூரியநமஸ்காரம் செய்கையில் விளையாட்டாக கந்தர்வன், அவரது கால்களை இழுத்தார். இதில் கோபமடைந்த முனிவர், முதலையாக பிறப்பாய் என சாபமிட்டார்.

தன் தவறை உணர்ந்த கந்தர்வன் சாப விமோசனம் வேண்டினான். பிறவியின் முடிவில் கஜேந்திரன் கால்களை பிடிக்க, விஷ்ணுவால் சாப விமோசனம் பெறுவாய் என கூறினார்.

அதன்படி கந்தர்வனும் அரசனும் முறையே முதலையாகவும், யானையாகவும் பிறவியெடுத்து தங்களது சாப விமோசனத்தை பெற்றனர்.

இந்த நிகழ்வு ஸ்ரீரங்கம் காவிரிக் கரையில் நடந்தது. அதை நினைவுக்கூரும் வகையில் ஆண்டுதோறும் சித்ரா பவுர்ணமி அன்று ஸ்ரீரங்கம் அம்மாமண்டபம் படித்துறையில் கஜேந்திர மோட்சம் நடை பெறும்.

“அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப
அன்பினால் உருகி. விழிநீர்
ஆறாக, ஆராத முத்தியினது ஆவேச
ஆசைக் கடற்குள் மூழ்கிச்.

சங்கர! சுயம்புவே! சம்புவே! எனவும் மொழி
தழுதழுத் திடவணங்கும்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையும்

தண்அருள் கொடுத்து ஆள்வையோ?

துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்
தொழுது அருகில் வீற்றிருப்பச்.
சொல்லரிய நெறியை ஒரு சொல்ல ல் உணர்த்தியே
சொரூப அநு பூதிகாட்டிச்,

செங்கமல பீடம் மேல் கல்ஆல் அடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே" (தா.பா.26)

- மேன்மை பொருந்திய பக்குவம் உடைய சனகன் முதலிய முனிவர்கள் நால்வரும் வணங்கி அருகில் அமர்ந்திருக்கவும்,
- விளக்கிச் சொல்ல அரியதான ஒரு நெறியை சின்முத்திரை காட்டி விளங்கிக் கொள்ளுமாறு செய்து உண்மையான பேரின்ப நுகர்வினை உணர்த்திட கல்லால மரத்தின்கீழ் சிவந்த தாமரை மலர்ப்பீடத்தில் எழுந்தருளி, சித்தாந்த முக்தி தரும் முதற்பொருளே!
- அழகிய கைகளால் மலர்களைத் தூவி, உடலானது மகிழ்ச்சியினால் அசைய, அன்பினால் மனம் உருகி. கண்களில் நீரானது ஆறுபோல் பெருக,
- முத்தியின்மீது கொண்ட வெளியுடன் கூடிய ஆசையாகிய கடலுக்குள் முழ்க,
- "சங்கரா! சுயம்பவே!

சம்புவே!" என மொழி குளறப் போற்றி வணங்கும் ஒழுக்க நெறியில் நில்லாது, தவறான நெறியில் நிற்கும் என்னையும். தேவரீரது குளிர்ந்த திருவருளைத் தந்து அட்கொள்வீரோ? என்று தாயுமானவர் வேண்டுகிறார்.

தவறான நெறியில்  செல்லாமல் ஒழுக்க நெறியில்  முழுமை எய்த வேண்டும் என்ற வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.

"ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றும்
ஒன்றிணைந்த உயர்நெறியே அறம் என்றாகும்.
ஒழுக்கத்தில் கடமை, ஈகை இரண்டும்
உள்ளடங்கி இருப்பதனை உற்றுப் பாரீர்!
ஒழுக்கமே வாழ்வில் என்றும் வெற்றி நல்கும்.
உயர்மக்கள் செல்வமும் அளிக்கும். மேலும்,
ஒழுக்கமே இறைனயுணர்வில் ஒளியுண் டாக்கி,
உயர்த்தி, அறிவில் முழுமை எய்த வைக்கும்."
(ஞாக.பா.453)

ஒழுக்கம் என்பது துன்புறுத்தாமை ஆகும். கடமை என்பது நன்றி பாராட்டி அடிப்படையாக ஒருவர் ஆற்றிட வேண்டிய செயல் ஆகும்.

ஈகை என்பது பிற உயிர் துன்பம் நீக்குவது ஆகும். ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றும் ஒன்றிணைந்த உயர் நெறி அறம் எனப்படுகிறது.

கடமைகளைக் கடமைக்காகவே செய்வதில் நன்றியுணர்வும், விளைவறிந்த விழிப்பு நிலையும் இணைந்து செயல்படுவதால் துன்ப விளைவு வராது.

அதுபோல பிற உயிர் துன்பம் நீக்கும் ஈகையான செயல்களிலும் துன்ப விளைவு இல்லை.

ஆகவே ஒழுக்கத்தில் கடமை ஈகை என்ற இரண்டும் உள்ளடங்கி இருப்பதை அறியலாம்.

வாழ்க்கையில் எப்போதும் வெற்றியும், உயர் மக்கள் செல்வத்தையும் அளிக்க வல்லது ஒழுக்கமேயாகும்.

மனிதப் பிறவியின் நோக்கமாகிய இறையுணர்விற்கு ஒளி உண்டாக்கி வழியைக் காட்டி அறிவில் உயர்வு பெற்று முழுமையைப் பெற உதவியாக இருப்பது ஒழுக்கமே ஆகும்.

## 2. தெளிவாகக் காணவைக்கும் பிரம்மஞானம்


இறைவனோடு இரண்டறக் கலக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போன்றதாகும்" என்ற தாயுமானவரின் பாடல் படிக்கும் போது நமக்கு நந்தனார் கதைதான் நினைவுக்கு வருகிறது.

தமிழ் நாட்டில் ஆதனூர் என்ற ஒரு சிறிய கிராமத்தில் நந்தனார் பிறந்தார். அவர் தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்தவராக இருந்தாலும், சிவ பெருமானின் சிறந்த பக்தராகத் திகழ்ந்து, ஒரு மிராசுதாரருக்கு வேலை செய்தார்.

ஒரு முறை, அவர் வசித்த கிராமத்திற்கு அருகில் இருந்த திருப்புன்கூர் என்ற கோயிலுக்கு தன் நண்பர்களோடு சென்று, தான் மிகவும் விரும்பிய சிவ பெருமானை தரிசிக்க ஆசைப் பட்டார்.

சிவலிங்கத்தை கண்ணார காண முடியாதபடி அங்கிருந்த நந்தி அவரைத் தடுத்தது. அச்சமயம் நந்தனார் பக்தி பரவசத்தோடு சிவ பெருமானின் தரிசனத்திற்காகக் கெஞ்சினார்.

அப்போது யாரும் எதிர்பாராத அற்புதம் அங்கே நிகழ்ந்தது. நந்தனார் சிவபெருமானை காண வேண்டும் என்பதற்காக நந்தி விலகியது. ஈசனின் கருணையை எண்ணி மகிழ்ச்சியுடன் வணங்கி அங்கிருந்து அவர் சென்றார்.



திருப்புன்கூரில் இருந்த போது, நந்தனார் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலைப் பற்றி கேள்விப் பட்டார். உடனடியாக சிதம்பரம் செல்ல வேண்டும் என்று அவர் ஏங்கினார்.

ஒவ்வொரு நாளும், எல்லோரிடமும் தான் அடுத்த நாள் சிதம்பரம் செல்வதாகக் கூறி வந்தார்; ஆனால் அவரால் அங்கு செல்ல முடியவில்லை.

அங்கிருந்த எல்லோரும் கேலித்தனமாக அவரை “திருநாளைப் போவார்” என்று அழைத்தனர். நந்தனார் கோயிலுக்குச் செல்ல தன் முதலாளியிடமிருந்து அனுமதி பெற வேண்டியிருந்தது.

நந்தனார் பல முறை கெஞ்சிய பிறகு, முதலாளி குறுகிய காலத்தில் விவசாய நிலத்தை பயிரிட்டு அறுவடை செய்து முடிக்க வேண்டும் என்ற கடினமான வேலையை அவருக்குக் கொடுத்தார்.

நந்தனாருக்கு கடவுள் மேல் பரிபூரண பக்தி இருந்ததால், இந்த வேலையை கடவுளே அவருக்கு பதிலாக செய்து முடித்தார்.

இப்போது சிதம்பரத்திற்கு சென்று கடவுளை பார்க்கும் ஒரு வாய்ப்பு கிடைத்ததால், நந்தனார் பேரின்பத்தில் மூழ்கினார்.

ஆக்கைஎனும் இடிகரையை மெய் என்ற பாவிநான்
அத்வைத வாஞ்சையாதல்
அரிய கொம் பில் தேனை முடவன் இச் சித்தபடி
ஆகும். அறிவு அவிழ இன்பம்

தாக்கும்வகை ஏது? இந்நாள் சரியை கிரி யாயோக
சாதனம் விடித்தது எல்லாம்
சன்மார்கம் அல்ல இவை நிற்க என் மார்க்கங்கள்
சாராத பேறறிவதாய்,

வாக்குமனம் அணுகாத பூரணப் பொருள்வந்து
  வாய்க்கும் படிக்கு உபாயம்
வருவித்து, உவட்டாத பேரின்பம் ஆனசுக
  வாரியினை வாய்மடுத்துத்,

தேக்கித் திளைக்கநீ முன்னிற்பது என்றுகாண்?
  சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
  சின்மயா னந்தகுருவே.”
(தா.பா.27)

- வெள்ளத்தால் இடிந்துவிழும் ஆற்றங்கரை போல் அழியும் தன்மை உடைய உடலை.
- உண்மை (நிலையானது) என்று நினைத்த பாவியாகிய நான், இறைவனோடு இரண்டறக் கலக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போன்றதாகும்.
- அறிவு விளக்கம் பெறவும், இன்பம் வந்து பொருந்தவும் வழிவகை எவ்வாறு பிறக்கும்?
- இப்பொழுது அடியேன் சரியை, கிரியை, யோகம் முதலிய நெறிகளை விட்டு நீங்கி நிற்பது நல்லெழுக்கம் ஆகாது.
- இவை ஒருபுறம் இருக்க, எந்த ஒரு நெறியையும் சாராத பேரறிவு உடையதாய், வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததாய், விளங்கும் முழுமையான பொருள் எனக்குக் கிடைக்கும்படி வழிவகை செய்து, தெவிட்டாத பேரின்பமாகிய சுகம் தரும் கடலை வாயினால் முகந்து, நிரம்ப உண்டு அனுபவிக்குமாறு செய்ய, நீ முன்வருவது எப்பொழுது?

“அறிவு விளக்கம் பெறவும், இன்பம் வந்து பொருந்தவும் வழிவகை எவ்வாறு பிறக்கும்?” என்ற தாயுமானவரின் வினாவிற்கு விடையாக வருகிறது வேதாத்திரியம். அறிவின் முழுமையே பிரம்மஞானம் என்பது வேதாத்திரியம்.

“கருமையம் காந்த அலை மூளை மற்றும்
  கருவிகளாம் ஐம்புலன்கள் கூடித் தோன்றும்
திருவிளை யாடல்கள அனைத்தும் உள்ளுக்குள்ளே
  தெளிவாகக் காணவைக்கும் பிரம்மஞானம்
வரும்காலம் அனைவருக்கும் இம்மெய்ஞ் ஞானம்
  வழிவழியாய் கருத்தொடராய் அனைவருக்கும்
கருவினிலே திருவுடையோ ராக மக்கள்
  களிப்புற்று, அமைதி பெற உலகம் உய்யும்.” (ஞாக.பா.1792)

எந்த ஒன்று சுழன்றாலும் மையம் அமைத்துக் கொள்ளும் என்பது பொதுவான விதி ஆகும். மையம் என்றால் திணிவுமிக்க இடம் ஆகும்.

உடலுக்கு மூலப்பொருள் வித்து. உயிருக்கு முக்கியப் பொருள் உயிர்த் துகள்கள். மனதுக்கு மூலப்பொருள் சீவகாந்தம். இவை மூன்றும் மையம் கொண்டுள்ள இடம் கருமையம் ஆகும்.

உயிர் சுழற்சியால் ஏற்படும் தள்ளல்-கொள்ளல் என்னும் இரட்டை ஆற்றல் காந்த அலையாகும்.

காந்த அலையில் உள்ள தரங்களை விரித்துக் காட்டுவது சிரசுப் பகுதியில் உள்ள மூளை ஆகும்.

தோல், காது, கண், நாக்கு மூக்கு, ஆகியவை உடலிலுள்ள ஐந்து புலன் கருவிகள் ஆகும்.

கருமையம், காந்த அலை, மூளை, மற்றும் ஐந்து புலன்கள் ஆகியவைகள் கூடி, செயல்படுத்துபவை அனைத்தையும், தனக்குள்ளாகவே தெளிவாக பிரம்மஞானத்தின் மூலம் காண வைக்கும்.

பிரம்மஞானம் என்னும் மெய்ஞானமானது எதிர்காலத்தில், தொடர்ந்து வரும் சந்ததியினரின் கருத்தொடராக அனைவருக்கும் கிட்டும்.

அதன்மூலம் கருவிலே திருஉடையோரான மக்கள் குலம் மகிழ்ச்சியும், மனை நிறைவும், அமைதியும் பெறுவதனால் உலகம் உய்யும்.

இறைநிலையே தன்வரையில் மாற்றம் பெற்று வந்திருக்கிறது என்ற உண்மை உணர்வே பிரம்மஞானம்.

அதுவே அறிவின் முழுமைப்பேறு ஆகும். மனிதன் பெறவேண்டிய பேறும்ஆகும். வாழ்க வளமுடன்.

## 3.அறுகுண சீரமைப்பில் அமைதி

காம, குரோதம் முதலிய சத்ருக்களை எப்பொது நாசம் செய்ய முடியும் என்று கேட்டதற்குப் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னதாவது.



”இவ்வித ஆசாபாசங்கள் உலகத்தையும் உலக விஷயங்களையும் பற்றியனவாக இருக்கிற வரையில் சத்ருக்களாகத்தான் இருக்கும்.

அவைகள் ஈசுவர விஷயமாக மாறினால் மனிதனுக்கு நற்றுணைகளாகும்.

ஏனெனில் அவைகள் அவனை ஈசுவரனிடம் அழைத்துச் செல்கின்றன.

உலக விஷயங்களிலுள்ள ஆசையைக் கடவுளிடத்து ஆசையாக மாற்ற வேண்டும்.

மக்களிடத்து உண்டாகும் கோபத்தை, கடவுள் தரிசனம் கிட்டவில்லையே என்று அவரிடம் காட்ட வேண்டும்.

இம்மாதிரி எல்லா ஆசாபாசங்களையும் மாற்றுக. அவைகளை அழிக்க முடியாது. ஆனால் நல்வழியில் திருப்பமுடியும். - ஸ்ரீராமகிருஷ்ணர்.

பொறாமை, நான் என்னும் தன்முனைப்பு, கொடை இல்லாமை. அருள் இல்லாமை, ஆசை ஆகிய பிசாசு முதலிய தீயகுணங்கள் அழிக்க முடியாது. அதனால் நல்வழியில் திருப்பமுடியும்.

“அவ்விய ம் இருக்க, நான் என்கின்ற ஆணவம்
அடைந்திட்டு இருக்க. லோபம்,
அருள் இன்மை கூடக் கலந்து உள் இருக்க, மேல்
ஆசா பிசாச முதலாம்

வெவ்விய குணம்பல இருக்க, என் அறிவூடு
மெய்யன்நீ வீற்றிருக்க
விதியில்லை என்னிலோ பூரணன் எனும்பெயர்
விரிக்கில் உரை வேறும் உளதோ?

கவ்வுமலம் ஆகின்ற நாக பா சத்தினால்
கட்டுண்ட உயிர்கள் மூர்ச்சை
கடிது அகல வலியவரும் ஞானசஞ் சீவியே!
கதிஆன பூமிநடுவுள்

செவ்விதின் வளர்ந்து ஓங்கு திவ்யகுண மேருவே!
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே." (தா.பா.28)

- பற்றி நிற்கும் மும்மலமாகிய நாகபாசம் என்னும் ஓர் ஆயுதத்தால் கட்டுண்டு கிடக்கும் உயிர்களது மயக்கத்தை விரைந்து போக்க வலிய முன்வரும் பேரறிவு என்னும் பெருவாழ்வே!
- உச்சந்தலைக்கு மேலே சகசிரதளத்தில் நன்றாக உயர்ந்து வளர்ந்து நிற்கும் தெய்வீகமான நற்குண மலையே!
- பொறாமை இருக்க, நான் என்னும் தன்முனைப்பு இருக்க, கொடை இல்லாமையும் அருள் இல்லாமையும் ஆகிய இவை ஒன்றாய்க் கலந்து என் உள் இருக்க,
- வெளியே ஆசை ஆகிய பிசாசு முதலிய தீயகுணங்கள் பல இருக்க.
- என் அறிவினுள்ளே மெய்ப்பொருளாகிய நீ எழுந்தருளி இருக்க வாய்ப்பு இல்லை.
- எனவே முழுமையானவன் என்னும் தேவரீரது திருப்பெயரை விரித்துப் பொருள் உரைக்கில், அதற்கு வேற பொருளும் உளதோ?

பொறாமை. நான் என்னும் தன்முனைப்பு, கொடை இல்லாமை. அருள் இல்லாமை, ஆசை ஆகிய பிசாசு முதலிய தீயகுணங்கள் களைய என்ன செய்ய வேண்டும். அறுகுண சீரமைப்பு செய்தால் அமைதியான நற்குணங்கள் அமையும் என்கிறது வேதாத்திரியம்.

"பேராசை, கவலைசினம், அழுக்காறு விட்டால்
பேரறிவாய் விரிவடையும் மனது. தரம்மாறி
ஓராசை உளத்திலெழ, ஒத்தநுட் பத்தோடு
உடலுறவு, சமுதாயம், இயற்கை நான்கின் இனிமை
சீராகக் காத்து ஆற்றும் சிறப்பு இயல்பாகும்.
சிந்தனையின் உயர்வினிலே விழிப்புடனே வாழ,
யாரசையும் இதனால் அறிவறிய ஓங்கும்.
எப்போதும் அமைதிஇன்பம், நிறைவுபெற்று வாழ்வோம்"
(ஞாக.பா.1603)

நிலையில் அறிவாக, அமைதியாக இருக்கும் உண்மை பொருளே அலையில் மனமாகவும் உள்ளது.

அறிவின் தரமே மனதின் திறமாக வெளிப்படுகிறது.  மன அலைச்சுழல் வேகம் குறைந்தால், விரியும் தன்மை கூடுதல் ஆகும்.

பேரறிவாக தன்னையே உணரும்படியாக விரிவடையக்கூடிய தரம் உடைய மனமானது, பேராசை, கவலை, சினம், பொறாமை ஆகியவற்றால் தன்மை மாறிவிடுகிறது.

ஏதேனும் ஒரு ஆசையானது மனதில் ஏற்படும்போது மன ஓர்மை, உடல் கொள்ளும் உறவின் விளைவு, சமுதாய நலன், இயற்கையின் இணக்கம் ஆகிய நான்கின் இனிமையை சீராகக் காத்துக் கொள்ளும்படியாகச் செயல்படுவதுதான் சிறப்புடையதாகும்.

இத்தகு நிலையை இயல்பாக்கிக் கொண்டால், சிந்தனையின் உயர்வினால் விளைவறிந்த விழிப்பு நிலையில் வாழமுடியும்.

இதனால் யாருடைய ஆசையும் அறிவை அறியும் நோக்கில் உயர்வடையும்.

எப்போதும் வாழ்வில் அமைதி, இன்பம், நிறைவு பெற்று வாழ, உணர்ச்சி நிலையாகிய அறுகுணங்களை சீரமைத்து வாழ்வோம்.

## 4.சிவநிலையை சீவனிலே உணர்ந்துகொண்டால்.

ஒரு ஊரில் வாழும் மக்கள் அனைவரும் கடவுள் மற்றும் வெவ்வேறு மதங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது அது ஒரு பெரிய விவாதமாக மாறியது. அந்த விவாதம் “கடவுள் பார்க்க எப்படி இருப்பார்?” என்பதைப் பற்றியதாகும்.

அங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைக் கூறினர். பின்னர் அதற்கு சரியான பதிலை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், ஒரு புத்தரை பார்த்து அவரிடம் அதற்கான பதிலை கேட்கச் சென்றனர்.

அங்கு அவரிடம் “கடவுள் பார்க்க எப்படி இருப்பார்? அதற்கு சரியான பதிலை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை” என்று கூறினார்கள்.

அப்போது புத்தர் அவர்களது சீடர்களிடம் “நான்கு குருடர்கள் மற்றும் ஒரு பெரிய யானையை கொண்டு வாருங்கள்” என்று கூறினார்.
அந்த சீடர்களும் கொண்டு வந்தனர்.

பின் புத்தர் அந்த நான்கு குருடர்களிடம், “நான் ஒரு பொருளை தருகிறேன், அது என்னவென்று கூறுங்கள்” என்று கூறினார். அவர்களும் சரி என்று கூறினார்.

முதலில் அந்த குருடர்களுள் ஒருவன் யானையின் கால்களை தொட்டுப் பார்த்து, அது “தூண்” போல் இருக்கிறது என்று கூறினான்.

மற்றொருவன் அதன் வயிற்றைத் தொட்டுப் பார்த்து, அது “சுவர்” போல் இருக்கிறது என்று கூறினான்.

மூன்றாமவன் அந்த யானையின் காதுகளைத் தொட்டுப் பார்த்து, “துணி” போல் இருக்கிறது என்று சொன்னான்.

அடுத்தவன் அதன் வாலைத் தொட்டுப் பார்த்து, “கயிறு” போல் உள்ளது என்றான்.

பின்னர் புத்தர் மக்களிடம் “இந்த குருடர்கள் யானையை தொட்டுப் பார்த்து, அவர்கள் உணர்ந்ததை வெவ்வேறு மாதிரி கூறினார்கள்.

இவற்றில் எது சரி?” என்று கேட்டு, அதே போல்தான் கடவுளும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி என்று கூறி உள்ளே சென்று விட்டார்.

இந்தப் பாடலில் “வேதம் ஆகமம் முதலிய நூல்களையும் கொடுத்து, சைவமே மேலான சமயம் எண்ணுமாறு சமயங்களையும் படைத்து

அதற்கு மேலும் சமயங் கடந்த நிலையில் மோன நிலையையும் அளித்து. நிற்பவன் நீ.” என்று இறைவனிடம் சொல்லுகிறார் தாயுமானவர்.

ஐவகை எனும்பூதம் ஆதியை வகுத்து அதனுள்
  அசரசர பேதம் ஆன
யாவையும் வகுத்து, நல் அறிவையும் வகுத்து, மறை
  ஆதிநூ லையும் வகுத்துச்,

சைவமுதல் ஆம் அளவில் சமயமும் வகுத்து.மேல்
  சமயம் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ உன்னையான் அணுகவும்
  தண்அருள் வகுக்க இலையோ?

பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே!
  பொய் இலா மெய்யர் அறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
  போக்குவரவு அற்றபொருளே!

தெய்வம் மறை முடிவான பிரணவ சொரூபியே!
  சித்தாந்த முத்தி முதலே
 சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
  சின்மயா னந்தகுருவே.” (தா.பா.29)

- பொய் வளரும் மனம் உடையவர்களால் காணமுடியாதபடி மறைந்து நின்று அருளும் பேரறிவுப் பெரும்பிழம்பே!
- பொய் சிறிதும் இல்லாத மெய்யடியார்களது அறிவில் முழுநிலைவான மெய்யுணர்வாய்த் திகழ்ந்து, எல்லையற்ற பெருவடிவாய் விளங்கும், போவதும் வருவதும் அற்ற பொருளே!
- தெய்வத் தன்மை பொருந்திய வேதங்களின் முடிந்த முடிபான ஓம் என்னும் பிரணவத்தின் பொருளாய் விளங்கும் மூர்த்தியே!
- ஐந்து வகையான பூதம் முதலியவற்றைத் தோற்றுவித்து
- அதனுள் அசையா உயிர்கள் அசையும் உயிர்கள் என வேறுபட்ட தன்மை உடைய உயிரினங்கள் யாவற்றையும் படைத்து,
- நல்ல அறிவையும் தந்து,
- வேதம் ஆகமம் முதலிய நூல்களையும் கொடுத்து,
- சைவமே மேலான சமயம் எண்ணுமாறு சமயங்களையும் படைத்து.
- அதற்கு மேலும் சமயங் கடந்த நிலையில் மோன நிலையையும் அளித்து. நிற்பவன் நீ.
- அவ்வாறிருக்க உன்னை நான் நெருங்குமாறு நினது குளிர்ந்த திருவருளை வகுக்கவில்லையோ?

பொய் வளரும் மனம் உடையவர்களால் காணமுடியாதபடி மறைந்து நின்று அருளும் பேரறிவுப் பெரும்பிழம்பே” என்று இறைவனை தாயுமானவர் குறிப்பிடுகிறார்.

மனதின் வளத்தைப் பெருக்கினால் இறைநிலையை உணரலாம் இறைவனைக் காணலாம் என்கிறது வேதாத்திரியம்.

“தவமுறையும் அறநெறியும் பற்றப் பற்ற,
  தருக்கென்ற தன்முனைப்புக் குன்றிப் போகும்.
பவவினைகள் புதிது எழா. முன்னம் செய்த
  பதிவுகளும் மறைந்து மெய்ப்பொருள் காணும்.
சிவநிலையை சீவனிலே உணர்ந்து கொண்டால்,
  சிறுமைதரும் மனமயக்க மாயை ஏது?
எவரெனி   னு ம இவ்வழியால் அன்றி உய்ய
  ஏதுவழி வேறுலகில்? எண்ணிப் பாரீர்!” (ஞாக.பா.1578)

தவமுறையைப் பின்பற்றினால், இறைநிலையின் ஒரு பகுதியான தானும் இருப்பதை மனிதன் உணர்ந்து கொள்வான்.

மனவளம் பெருகி இறையுணர்வு நிலையாகிய அன்பு, கருணையான செயல்களாக வெளிப்படுவதால், குற்றமில்லாத வாழ்க்கையாகிய அறநெறி வாழ்வு இயல்பாகும்.

அதன் வாயிலாக அகங்காரம் என்ற தன்முனைப்பு குறைந்து போகும்.

இனிப் பழி புரியா தகைமையால் ஆகாம்ய வினைகள் புதிய பழிப்பதிவுகளாக ஏற்படாது.

சஞ்சித, பிராரப்த கர்ம வினைகளாகிய முன்வினைகளின் பாவப்பதிவுகளும் மறைந்து உண்மை உணர்வு விளங்கும்.

சிவம் என்ற பூரண பேரறிவு நிலையை, சீவ நிலையாகிய சிற்றிவிலேயே உணர்ந்து கொண்டால் துன்பம் தரும்.

மனதின் மயக்க நிலையாகிய மாயை ஏது? யாராக இருந்தாலும் தவமுறை, அறநெறி என்ற இருவழிகளன்றி, வேற எந்த வழியில் உலகில் வாழமுடியும்? சிந்தித்துப் பார்ப்பீர்களாக!

## 5.பிறவி தொடரும் காரணம் என்ன?

பிறப்பு இறப்பு பற்றிய அச்சத்தை தாயுமானவர் இப்பாடலில் சொல்லுகிறார்.

'உங்களது வாழ்க்கைக்கான ஒவ்வொரு நாளையும், இறுதி நாளாக நினைத்து வாழ்ந்தால், ஏதாவது ஒரு நாளில் உங்கள் லட்சியம் நிச்சயம் நிறைவேறும், என்று பதினேழாவது வயதில் நான் படித்த வாசகம் இன்னமும் நினைவில் இருக்கின்றது. இதை நான் இப்போதும் கடைபிடிப்பேன்,' என்றார் ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ்ஸ் ஜாப்ஸ்.



'நாள்தோறும் காலையில் கண்ணாடியில் முகம் பார்க்கும்போது, இன்றைய நாளே நமக்கு இறுதி நாள் என்று நினைத்துக்கொண்டு வேலைகளைத் தொடங்குவேன்.

வாழ்க்கையின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு மரணம். உங்களுடைய நேரம் குறிப்பிட்ட வரம்புக்கு உட்படாது.

எனவே வாழ்க்கையை வீணாக்காதீர்கள். மரணத்தை எதிர்கொள்ளும் நேரத்தில் வாழ்க்கையை கடைசி வரை வாழ்ந்து பார்த்து விட வேண்டும்,' என்றார்.

மரணம் இருப்பதால்தான் வாழ்க்கைக்கு மதிப்பு உண்டாகிறது. மதிப்புமிக்க வாழ்வை கற்றுத் தருகிற மரணத்திற்குப் பரிசு அளித்தார் ஒருவர்.

மரணத்திற்குப் பரிசா? இதோ அந்தப் பரிசு...

மரணம் உன் வீட்டுவாயிற் கதவைத் தட்டுகிறபோது என்ன கொடுப்பாய்? வெறுங்கையோடு அனுப்ப மாட்டேன் தட்டு நிறைய என் வாழ்க்கையைப் பரிசாகத் தருவேன். பரிசு தந்தவர் வேறுயாருமல்ல நோபல் பரிசு பெற்ற கவிஞர் தாகூர் தான்.

இப்படி மரணத்திற்குப் பிறகும், மனிதர்களை வாழ்வாங்கு வாழச்சொல்வது மரணம்தான். அதனால் தான் மரணம் வாழ்வில் நேசிப்பிற்குரியது.

ஐந்துவகை ஆகின்ற பூதபே தத்தினால்
ஆகின்ற ஆக்கை. நீர்மேல்
அமர்கின்ற குமிழி என நிற்கின்றது என்னநான்
அறியாத காலம் எல்லாம்

புந்திமகிழ் உற உண்டு உடுத்தி இன்பம் ஆவதே
போந்தநெறி என்றி இருந்தேன்.
பூராய ஆகநினது அருள்வந்து உணர்த்த இவை
போனவழி தெரியவில்லை.

எந்தநிலை பேசினும் இணங்கவிலை, அல்லால்
இறப்பொடு பிறப்பை உள்ளே

எண்ணினால் நெஞ்சு பகீரெனும். துயில் உறாது
இருவிழியும் இரவுபகலாய்ச்

செந்தழலின் மெழுகானது அங்கம். இவை என்கொலோ?
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே.” (தா.பா.30)

- ஐந்து வகையாய் விளங்கும் பூத வேறுபாட்டினால் உண்டாகும் உடம்பு, நீர்க்குமிழி போல கணநேரத்தில் தோன்றி மறையும் தன்மை உடையது என்பதை அறியாத காலத்தில், மனம் மகிழுமாறு உண்டு, உடுத்து இன்புற்று இருக்கவே வந்துள்ளோம் என்று இருந்துவிட்டேன்.
- முழுவதும் நின்னுடைய திருவருள் வந்து உண்மையை உணர்த்தியபோது, இவை போன இடம் தெரியவில்லை.
- இப்பொழுது என்னதான் பேசினாலும் மனம் ஒப்ப மறுக்கிறது அல்லாமல், இறப்பு பிறப்பு குறித்து உள்ளத்தால் நினைக்க அச்சம் தோன்றுகிறது.
- இரவுபகல் என எந்நேரமும் இருவிழிகளும் உறங்காது இருக்க, அனலில்பட்ட மெழுகுபோல் உடல் உருகுகிறது.  இவையெல்லாம் நிகழ்வது ஏனோ?

“இறப்பு பிறப்பு குறித்து உள்ளத்தால் நினைக்க அச்சம் தோன்றுகிறது” என்று தாயுமானவர் பயப்படுகிறார்.

பிறவித் தொடருக்கு காரணம் என்ன? என்பதை விளங்கிக் கொண்டால் அச்சம் அகன்று விடுமே என்கிறது வேதாத்திரியம்.

“விரும்பிய பல்பொருள்தமை, செயல்கள் தம்மை
வேண்டிய வாறுலகில் துய்த்து அமைதிகாணாப்
பெரும்குறையால், புலன்மயக்கில் பழிச் செயல்கள்
பேரழுத்தம், புறமனத்தில் நடுமனத்தில்
சுருங்கியநற் பதிவுகளை அழிக்காப் போக்கால்,
சுகதுக்கச சூழல் இயக்க உயிர் மூலத்தை
நெருங்கி உணர்ந்து அதில் இணைய அறிந்திடாத
நிலை, இவற்றால் மனிதஉயிர் பிறவிநீளும்.” (ஞாக.பா.1305)

தேவைக்கோ, தேவையில்லாமலோ பல பொருட்களை மக்கள் அனுபோகிக்கிறார்கள். தமது இஷ்டம் போல செயல்களையும் செய்கிறார்கள்.

அமைதி கிட்டாத பெரிய குறைபாட்டால், புலன் மயக்கத்தில் பழிச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

புற மனதிலும், நடு மனதிலும், இயற்கையின் ஆற்றலாகிய பேரமுத்தம் பழக்கப் பதிவுகளாக சுருக்கி இருப்பாகி விடுகிறது.

திரும்பத் திரும்ப அதே மாதிரியான செயல்களைப் பழக்கத்தினால் செய்கிறார்கள்.

இன்பம் துன்பம் என்ற விளைவுகளையும் பதிவாக்கிக் கொள்கிறார்கள்.

தீய விளைவுகள் தரும் பதிவுகளை மாற்றிக் கொள்ளாத வகையில் வாழ்வின் போக்கில் வாழ்கிறார்கள்.

இன்ப துன்பத்திற்கான சூழல், உயிர் இயக்கத்தின் மூலமாகிய அறிவை நெருங்கி அதில் இணைந்து செயலாற்றிட வேண்டும் என அறிந்திடாத நிலையில் வாழ்கிறார்கள்.

இவையெல்லாம் மனித உயிர் பிறவி தொடரும் காரணங்கள் ஆகும். களங்கமுற்ற ஆன்மா என்னும் அறிவு தூய்மை பெற்றாலே அன்றி பிறவித் தொடர் அறுபடாது.

எனவே ஆன்மா என்னும் அறிவை தூய்மை செய்து பிறவித் தொடரை அறுத்து ஆனந்தமாக வாழ்வோமாக!

## 6 பேரின்ப வீட்டில் நன்றாக உறங்கலாம்

இறைவனே! ஆனந்தத்தின் மொத்தவடிவம். ஆனந்தம் பெறவே உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

உழைப்பதும், உண்பதும், ஒருவரை ஒருவர் அன்பு கொண்டு வாழ்வதும் எல்லாம் ஆனந்தத்தின் பொருட்டே. நம்மால் என்றுமே ஆனந்ததை விடுத்து வாழவே முடியாது.

எங்கும் ஆனந்தமே. எதிலும் ஆனந்தமே! இதற்காகவே, இறைவனும் சிற்சபையில் ஆனந்த நடனமிடுபவனாக இருக்கிறான்.

இறைவன் எல்லா திசைகளிலும் நிறைந்திருக்கிறான். நம் இதயத் தாமரையாகிய மனத்தில் தேனாக இருந்து தித்திக்கும் இனிமை உடையவன் இறைவன்.

அவனையே எப்போதும் சிந்திப்போமாக. பொருளின் மீது நாட்டம் கொண்டவனுக்கு அருட்செல்வம் என்றும் எட்டாக்கனியாகும்.

திருவோட்டையும், செல்வமாகிய நிதியையும் ஒன்று போல காணும் உத்தமர்களின் நெஞ்சத்தை தன் இருப்பிடமாக கொண்டிருப்பவன் இறைவன்.

குழந்தையின் மனதில் தான் என்னும் அகங்காரம் இல்லை. இவர் நல்லவர், கெட்டவர், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேதங்கள் தெரிவதில்லை.

மனிதனும் குழந்தை போல வெள்ளை உள்ளம் கொண்டால் அவனே ஞானியாவான்.

வாழ்வில் எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் மனம் எதைப் பற்றியும் கவலை கொள்ளாது இறையுணர்வில் எப்போதும் இருக்க வேண்டும். ஞானம் கைவரப்பெறும்.

ஞானத்தினால் வரும் ஆனந்தம் நிலையானது. இதுதான் வாழ்வில் இலட்சியம்.

ஆனந்தம் நான்கு வகையில் கிடைக்கலாம்

- பொருள்கள் மூலம் கிடைக்கும் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
- வைராக்கயத்தின் மூலம் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
- அறிவால் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
- ஞானத்தால் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.

அறிவினால் ஆசையைப் போக்கிவிட்டால், ஆசைகளை சீரமைத்துவிட்டால் பேராசைகள் போய்விடும். ஆனந்தம் நிலைத்து நிற்கும். பூரண திருப்தி கிடைக்கும்.

அறிவு நிலைத்து விட்டால் பொறாமைப்படும் மனது அழிந்து விடும். கோபப்படும் மனது அழிந்து விடும். விருப்பு வெறுப்புள்ள மனம் அழிந்துவிடும்.

அழகான மனதுடன் இருப்போம். அறிவின் லட்சணம் “நான் ஆனந்த சொரூபம்.”

பேரின்ப வீட்டில் நன்றாக ஆனந்தமாக உறங்குமாறும் செய்கின்றாய்” என்று தாயுமானவர் இப்பாடலில் பாடுகிறார்.

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவு அற்ற
  கண்இலாக் குழவியைப்போல்
 கட்டுண் டு இருந்தஎமை வெளியில் விட்டு, அல்லலாம்
  காப்பு இட் டு அதற்கு இசைந்த

பேரிட்டு. மெய் என்று பேசுபாழ்ம் பொய்உடல்
  பெலக்கவிளை அமுதம் ஊட்டிப்
 பெரிய புவனத்தினிடை போக்குவரவு உறுகின்ற
  பெரிய விளை யாட்டு அமைத்திட்டு,

ஏரிட்ட தன்சுருதி மொழி தப்பில் நமனைவிட்டு
  இடர் உற உறுக்கி இடர்தீர்த்து,
 இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
  இசைந்துதுயில் கொண்மின் என்று

சீரிட்ட உலகு அன்னை வடிவான எந்தையே!
  சித்தாந்த முத்திமுதலே!
 சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
  சின்மயா னந்தகுருவே." (தா.பா.31)

- இருளால் சூழப்பட்ட கருமை நிறமுடைய அறையில் அறிவும் கண்பார்வையும் இல்லாத குழந்தை கிடந்தாற் போல ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடந்த உயிரை,
- வெளியில் விட்டு, துன்பத்தையே காவலாக்கி, பொருந்தமான ஒரு பெயரும் வைத்து,
- மெய் என்று பெயர் பெற்ற பொய்யான பாழ்த்த உடல் வலுப்பெறும் வகையில்,
- விளைந்த தானியங்களை உணவாகத் தந்து,
- பெரிய இந்நிலவுலகில் வந்து பிறக்கவும் இறக்கவும் செய்த,
- அதனையும் திருவிளையாடலாய் நிகழ்த்தி,
- வேதம் கூறும் நியதிக்குப் புறம்பாக வாழ்ந்தால் எமனை அனுப்பி அதட்டித் துன்பம் தந்தும்,
- வேத விதிப்படி ஒழுகின். துன்பத்தைப் போக்கி, இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டில் நன்றாக உறங்குமாறும் செய்கின்றாய்.

"வேத விதிப்படி ஒழுகின். துன்பத்தைப் போக்கி, இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டில் நன்றாக உறங்குமாறும் செய்கின்றாய்" என்ற தா யுமான   வரின் தத்துவத்தை, "வாழ்க்கை நெறியே யோகம்" என்று எளிமைப் படுத்துகிறது வேதாத்திரியம்.

"தீயவினைப் பதிவுகளைத் திருத்திப்போக்கித்

தெளிந்த அறிவின் விழிப்பில் நிலைத்து, என்றும்
தூயவினை தேர்ந்தாற்றித் துன்பம் நீக்கும்
தொழில்களையே கடமையெனத் தேர்ந்து செய்து,
மாயமெனும் மறைபொருளாம் அறிவறிந்து,
மண்ணுலகில் உயிர்கட்குத் துன்பம் நீக்க,
நேயமுடன் தொண்டாற்றி இன்பம் துய்க்கும்
நிறைவாழ்வாம் நெறியதுவே யோக மாகும்." (ஞாக.பா.1292)

யோகம் என்றால் பொதுவாக இணைதல், சேர்தல் எனக் கூறுவர்.

இறைநிலையின் தன்மாற்றத்தில் மனித அறிவு ஒரு சிறு பகுதியாகும்.

இறைநிலையாகிய பேரறிவோடு மீண்டும் இணைதல் தான் யோகம் ஆகும். அந்த நிலையை அடைவதற்காக எடுத்தது தான் மனிதப் பிறப்பு ஆகும்.

ஆனால் தொடர்ந்து பல பிறவிகள் எடுத்து வந்துள்ளதில் ஆன்மா களங்கமடைந்துள்ளது.

களங்கங்களை நீக்கிக் கொள்ளாதவரை பிறவியின் நோக்கமாகிய இறை இணைப்புக் கிட்டாது.

தீய வினைப் பதிவகளாகிய பழிச் செயல் பதிவுகளைத் திருத்திப் போக்கிக் கொள்ள வெண்டும்.

விளைவறிந்த விழிப்பு நிலையில், தூய செயல்களையே கடமை உணர்வுடன் செய்தால், இனிப் பழிப் புரியாத தகைமை கிட்டும்.

மறை பொருளாக உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவாக உள்ள தெய்வீகத் தன்மையை அகத்தவத்தின் மூலம் உணர்ந்து, எவ்வித எதிர்பார்ப்புமின்றி ஆன்ம நேயத்துடன், செய்யும் செயல்களை எல்லாம் அர்ப்பணிப்பு உணர்வுடன் தொண்டாகவே கருதி செய்து வருமேயானால், முன் வினைப் பதிவுகளின் விளைவுகளை ஏற்று அனுபவித்துத் தீர்க்கக்கூடிய வலிமை உடலுக்கும் மனதிற்கும் கிட்டும்.

ஆன்ம களங்கங்கள் நீங்கப் பெற்ற ஆன்மா வாழ்வில் நிறைவை அனுபவிக்கும்.

இனிப் பழி புரியாத தகைமையும், ஏற்கனவே செய்த பழிச்செயல் பதிவுகளின் விளைவுகளை எதிர்கொள்ளும் திறனும் கிட்டக்கூடிய வாழ்க்கை நெறியே யோகம் எனப்படுகிறது.

யோக நெறியை நாள்தோறும் பின்பற்றி ஆனந்தமாக வாழ்வோமாக.

# 7 அடிமை கொண்ட திருவருளின் திறம்

“தனக்கு ஒப்புமை இல்லாதவனாகிய தனித்தலைமைக் கடவுளாம் சிவபெருமான், என்னைப் போன்ற ஒன்றுக்கும் அற்றவர்கள் பலரும் கேட்குமாறு, ஓர் அந்தணன் வடிவில் தோன்றி, தனது முழுமுதல் தன்மையைத் தானே எடுத்துச் சொல்லி, என்னை வலிந்து அழைத்து, ஆட்கொண்டு அருளிய பேரருள் தன்மைதான் என்னே?” என்று இறைவனின் அடியவர்க்கு அருளும் எளிய தன்மையை வியந்து உருகுகின்றார் மணிவாசகப் பெருமான்.

தன்நேர் இல்லோன் தானேஆன தன்மை
என்நேர் அனையோர் கேட்கவந்து இயம்பி
அறைகூவி ஆட்கொண்டு அருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும்”
(திருஅண்டப்பகுதி:146-149)

இறைவன் தானே நேரில் வந்து தம்மை ஆட்கொண்டார் என்று மணிவாசகரே கூறும் வாக்குமூலம் இதுவாகும்.

“கடுமையான தவங்கள் தேவையில்லை; அன்பான எளியவர்களுக்கு நானே வலிய வந்து அருள் செய்கிறேன்” என்று நம்மைப் போன்ற சாமானியர்களுக்காக இறைவன் அருளிய உறுதிமொழிப் பத்திரமாகும்.

மாணிக்கவாசகரைப் போல தாயுமானவரும் “என்னை அடிமை கொண்ட திருவருளின் திறத்தை என்னவென்று சொல்லுவேன்?” என்ற இந்தப் பாடலில் பாடுகிறார்.

கருமருவு குகை அனைய காயத்தின் நடுவுள்
  களிம்புதோய் செம்பு அனையயான்
 காண்தக இருக்க, நீ ஞான அனல் மூட்டியே
  கனிவுபெற உள் உருக்கிப்,

பருவம் அதுஅறிந்து, நின் அருளான குளிகைகொடு
  பரிசித்து வேதிசெய்து.
 பத்துமாற் றுத் தங்கம் ஆக்கியே பணிகொண்ட
  பஷத்தை என் சொல்லுகேன்?

அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்தம்
  ஆதியாம் அந்தம் மீதும்

அத்வித நிலையராய் என்னை ஆண்டு, உன்அடிமை
ஆன வர்கள் அறிவினூடும்

திருமருவு கல்லால் அடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.” (தா.பா32)

- அரிதில் பெறுவதான புகழைத் தாமும்பெற்று விளங்கும் வேதாந்த சித்தாந்தம் முதலியவற்றின் முடிவின் மீதும்,
- இரண்டற்ற நிலையில் என்னை ஆட்கொண்டு (உயிரில் இரண்டறக் கலந்து) முன்னமே அடிமையான பழைய அடியார்களின் அறிவிலும்,
- சிறப்பு பொருந்திய கல்லால மரத்தின் கீழுடை ஆகிய இரண்டிடத்தும் எழுந்தருளியும் இருக்கின்ற சித்தாந்த முத்தி வழங்கும் முதற்பொருளே!
- கரிய நிறக் குகை போன்ற உடம்பின் நடுவில் நாளும் களிம்பு ஏறும் செம்புபோல் ஆணவமலக் கரையோடு கிடந்த அடியேன் (எனது உயிர் இவ்வாறு இருக்க)
- நீவிர் ஞானமாகிய தீயை மூட்டி இளக்கம் உண்டாகுமாறு உள்ளத்தை உருக்கி,
- தக்க பருவம் வரும்வரை காத்திருந்து,
- திருவருள் என்னும் குளிகை கொண்டு பரிசித்து,
- வேதி செய்து,
- பத்து மாற்றுத் தங்கமாக மாற்றி,
- என்னை அடிமை கொண்ட திருவருளின் திறத்தை என்னவென்று சொல்லுவேன்?

“என்னை அடிமை கொண்ட திருவருளின் திறத்தை என்னவென்று சொல்லுவேன்?” என்று இறைநிலையின் தன்மையை வியக்கிறார் தாயுமானவர். இதைத்தான் “இறைநிலை இன்பம்” என்று கொண்டாடுகிறது வேதாத்திரியம். வேதாத்திரியத்தில் சொல்லுகிறார் வேதாத்திரி மகரிஷி.

“அன்பும் கருணையுமாம், அகன்ற நிலையிலுள்ளாய்!
என் மனதை விரித்து இணைத்துக் கொண்டாய் உன்னுள்ளே.
கன்ம வினைகளெல்லாம் கழிந்தன. உணர்கின்றேன்!
உன்னையறிந்து உய்ய, உலகோர்க்குத் தொண்டு செய்வேன்.”
(ஞாக.பா.1651-5)

தோற்றங்கள் அனைத்திலும் உனது பேரறிவும், பேராற்றலும் அன்பும் கருணையுமாக இருப்பதை உணர்கிறேன்.

அதனால் எனது மனதையும் விரிக்கச்செய்து உன்னுடன் இணைத்துக் கலப்புறச் செய்து விட்டாய்.

அதனால் என் முன்வினைப் பதிவுகள் அனைத்தும் கழிந்து ஆன்மா தூய்மை பெற்றுள்ளதை உணர்கின்றேன்.

உலகில் வாழ்கின்ற சீவர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் உன்னை அறிந்து அனுபவித்து வாழ்வதற்கு வழி காட்டிவிட்டாய் இறைவா.

## 8. வழிகாட்டிய வள்ளல்

மகான்களுக்கும் வள்ளல்கள் வழிகாட்டியுள்ளனர். சுவாமி விவேகானந்தருக்கு இராமகிருஷ்ணர் வந்து வழிகாட்டினார்.

சகோதரி நிவேதிதைக்கு சுவாமி விவேகானந்தரும், பாரதியாருக்கு நிவேதிதை அம்மையாரும், வேதாத்திரி மகஷிக்கு பரஞ்சோதி மகானும் வழிகாட்டியது போல தாயுமானவருக்கு மௌனகுரு வழி காட்டினார்.

ஒரு மனிதன் ஞானம் அடைவதற்கு ஒரு குருவின் துணை மிகவும் அவசியம். தனியாக மனிதன் ஞானம் அடைய முடியாது. குரு இல்லாமல் ஞானம் இல்லை
.
குரு உபதேசம் மிகமுக்கியம். ஞான வேட்கை உள்ளவர்களுக்கே உபதேசம் கிடைக்கும். அவர்களாலேயே உபதேசத்தை புரிந்துகொள்ளவும் முடியும். உடனடியாக இல்லாவிட்டாலும், சற்று தாமதமாகவாது. குரு உபதேசித்த வழி நடந்தாலே ஞானம் சித்திக்கும்.

மனதை அறிவினிடத்து செலுத்துவதற்கு குரு வழிகாட்டுகிறார் என்பதை “கை காட்டி” எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

மௌன குரு வடிவத்தில் தமக்கு ஞான வழியைக் காட்டித் தந்த பேற்றினைத் “மௌனகுருவாகி வந்து” என்கிறார்.

தாயுமானவர் தம் குருநாதர் அருளால் தம்முடைய பிரபஞ்ச செயல் பரமார்த்திகச் செயலாக மாறி அமைந்ததை “என தாம் பணி அற மாற்றி” என்று ஆனந்தக்களிப்பில் பாடுகிறார்.

பிரபஞ்ச வாழ்வில் உழன்று கொண்டிருந்த மனத்தைப் பேரானந்தம் என்னும் அமிர்தக் கடலில் குருநாதருடைய அருள் அமிழ்த்தி வைக்கிறது.

மௌனகுரு தமக்கு அத்தகைய பெரும் பேற்றினைத் தந்து தம் மனத்தை அருள் கடலில் அமிழ்த்தி வைத்தார் என்பதனை "அவன் இன்னருள் வெள்ளத்தில் இருத்தி வைத்தாண்டி" என்றும் ஆனந்தக் களிப்பில் பாடியுள்ளதை இப்பாடலிலும் சொல்லுகிறார்.

கூடுதல் உடன்பிரிதல் அற்று, நிர்த் தொந்தமாய்க்
  குவிதல் உடன் விரிதல் அற்றுக்
 குணம் அற்று வரவினொடு போக்கு அற்று நிலைஆன
  குறிஅற்று மலமும் அற்று.

நாடுதலும் அற்று, மேல் கீழ்நடுப் பக்கம் என
  நண்ணுதலும் அற்று, விந்து
 நாதம் அற்று? ஐவகைப் பூத பேதமும் அற்று
  ஞாதுருவின் ஞானம் அற்று,

வாடுதலும் அற்று, மேல் ஒ னறு அற்று இரண்டு அற்று,
  வாக்கு அற்று மனமும் அற்று
 மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
  வாய்மடுத்து உண்டு, அவசமாய்த்

தேடுதலும் அற்ற இடம் நிலைஎன்ற மௌனியே!
  சித்தாந்த முத்திமுதலே!
 சிரகிரி விளங்கவரு தஷிணா மூர்த்தியே
  சின்மயா னந்தகுருவே." (தா.பா.33)

- கூடுதலும், கூடியவுடன் பிரிதலும் இன்றி.
- இரண்டு என்னும் தன்மை இன்றி.
- குவிதலும் பின்னர் விரிதலும் இன்றி.
- முக்குணங்கள் இன்றி.
- பிறப்பு இறப்பு இன்றி.
- நிலைத்த உருவம் இன்றி.
- மும்மலங்கள் இன்றி.
- விருப்பம் இன்றி.
- கீழ், நடு, பக்கம் என்பன இன்றி.
- விந்து தத்துவம் இன்றி.
- நாத தத்துவம் இன்றி.
- ஐந்துவகை பூத வேறுபாடுகளும் இன்றி.
- காண்பானும் காட்சியும் இன்றி.

- வாட்டம் உறுதல் இன்றி.
- நாத தத்துவம் இன்றி.
- ஐந்துவகை பூத வேறுபாடுகளும் இன்றி.
- காண்பானும் காட்சியும் இன்றி.
- வாக்கு இன்றி.
- மனம் இன்றி.
- விளங்கும் நிலைத்த முழுமையான பேரின்பமய கடலை,

"வாய் வைத்துப் பருகி மகிழ்ந்து, சிவபோதம் அடையப் பெற்று, தேடுதல் அற்ற இடமே, அடைய வேண்டிய இடம் என்று என் மௌனகுரு சொன்னான்." என்கிறார் தாயுமானவர்.

குருவானவர் என்னென்ன செய்வார் என்பதையும் வேதாத்திரியம் எளிமையாகக் கூறுகிறது.

"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
 சீரறியச் செய்த குருவே!
அந்தநிலை தனிலறிவு அசைவற்றிருக்கப் பெறும்
 ஆனந்தம் பொங்கு தங்கே!
இந்தப்பெரும் உலகமிசை எடுத்த பல பிறவிகளில்
 இறுதிப் பயன் ஆகிய
சந்ததமும் எனைமறவாத சாந்த வாழ்வளித்தோய் என்
 சந்தோசச் செய்தி இதுவே." (ஞாக.பா.6)

சிந்தை என்றால் மன உணர்வு என்று பொருள். மனம் என்பது ஒரு பொருளல்ல. அனுபோக அனுபவங்களுடன் கூடிய ஜீவகாந்த அலையாகும்.

உயிர்ச்சுழல் வேகத்தை மன அலைச்சுழல் வேகமாகக் கணக்கிடப்படுகிறது.

ஒரு வினாடிக்கு ஒன்று முதல் நாற்பதுவரை மனிதனில் இயங்குகிறது. பீட்டா, ஆல்பா, தீட்டா, டெல்டா என்ற நான்கு நிலைகளில் இயங்குகிறது.

ஒன்றுக்கு குறைந்தாலும், நாற்பதிற்கு மேல் இயங்கினாலும் இயக்கம் நின்று மரணம் சம்பவிக்கும்.

மனம் தான் மனிதன். மனிதன்தான் மனம். மனதை அடக்க நினைத்தால் அடங்காது. மனதைக் கொண்டே மனதை அறிய

நினைத்தால் அவை அடங்கி நிலைக்கு வரும்போது அசைவற்ற நிலையாகிறது.

யோகம் என்ற தியானம் செய்வதன் நோக்கம் மனதின் ஊசலாட்டத்தைக் கட்டுப்படுத்துதல் என்கிறார் யோகங்களின் தந்தையான பதஞ்சலி முனிவர்.

தொடர்ந்த பல பிறவிகள் எடுத்து, பீட்டா அலையாகிய உணர்ச்சிவயப்பட்ட நிலையில் மனதை இயக்கி, இன்ப துன்பம் என்னும் இருநிலைகளையே அறிவு அனுபவித்துப் பழகியுள்ளது.

தியானத்தின் மூலம் பீட்டா அலையிலிருந்து படிப்படியாக வேக த்தை குறைத்து டெல்டா அலையில் மனம் அசைவற்று நிற்கும்போது உடல், உயிர், மனம், அறிவு ஒன்றாகி ஆனந்த நிலை கிட்டுகிறது.

அறிவிற்கு ஓய்வு அளிப்பதால் சும்மாயிருக்கும் சுகம் கிட்டுகிறது. பிறவி எடுத்ததன் பயனை அனுபவிக்க முடிகிறது.

சிற்றறிவு பேரறிவில் லயமாவதால் இனிப் பிறவி இல்லை. இதுவே கடைசிப் பிறவி ஆகிறது.

நீடித்த, நிலைத்த, சலிப்பில்லாத அமைதியினால், ஒரு சிறிது நேரம்கூட எனை மறந்த மயக்கநிலையில் இல்லாமல் விளைவறிந்த விழிப்பு நிலையில் செயல் செய்யக்கூடிய திறனை எனக்கருளிய குருவே, பிறவியின் நோக்கம் இப்பிறவியில் நிறைவுற்றது என்ற சந்தோஷச் செய்தியை தங்களுக்கு சமர்ப்பித்து மகிழ்கிறேன்.

## 9.முழுமைப் பேறடைந்தால் வீடுபேறு எய்தலாம்.

போர்வீரன் ஒருவன் ஜென் குருவை அணுகிக் கேட்டான்.

“ஐயா, சொர்க்கம் அல்லது நரகம் என்று உண்மையிலேயே ஏதாவது இருக்கிறதா?"

அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவனைப் பார்த்துக் கேட்டார் குரு-

“நீ உண்மையிலேயே ஒரு போர்வீரனா? பார்த்தால் பிச்சைக்காரன் போல இருக்கிறாய்.

உன்னைத் தன் படைவீரனாக நியமித்திருக்கும் உன்னுடைய அரசன் எப்பேர்ப்பட்ட பிச்சைக்காரனாக இருப்பான்?"

போர்வீரன் கடுங்கோபத்துடன் வாளை உறையில் இருந்து உருவத் துவங்கினான்.

ஓஹோ. வாளை வைத்திருக்கிறாயோ? அதற்கு என் தலையை சீவும் வல்லமை இருக்கிறதா என்று கேட்டார் குரு.

அவன் ஏறத்தாழ அவர் தலையை சீவத் தயார் ஆனான்.

அவன் கையைப் பிடித்து நிறுத்தி குரு சொன்னார்

“இப்போது நரகத்தின் கதவுகள் திறக்கின்றன" அவன் ஒருவாறு சமாளித்து தலைகுனிந்து வெட்கி அவரை வணங்கி நின்றான்.

குரு சொன்னார்- “இப்போது சொர்க்கத்தின் கதவுகள் திறந்து விட்டன..

“தாராத அருள் எலாம் தந்து அருள மௌனியாய்த்
தாய் அனைய கருணைகாட்டித்.
தாள் இணைஎன் முடிசூட்டி. அறிவில் சமாதியே
சாசுவத சம்ப்ரதாயம்.

ஓராமல், மந்திரமும் உன்னாமல், முத்திநிலை
ஒன்றோ டு இரண்டு எனாமல்
ஒளி எனவும் வெளி எனவும். உருவு எனவும், நாதம் ஆம்
ஒலிஎனவும் உணர்வு உறாமல்

பாராது பார்ப்பதே ஏதுசா தனம் அற்ற
பரமஅநு பூதிவாய்க்கும்
பண்பென்று உணர்த்தியது பாராமல், அந்நிலை
பதிந்தநின் பழஅடிர் தம்

சீராய் இருக்க நினது அருள் வேண்டும் ஐயனே!
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.” (தா.பா.34)

- தரமுடியாத அருளை எல்லாம் தந்து,
- மௌனகுருவாய் வந்து,
- தாய் போல் இரங்கி.
- இரண்டு திருவடிகளையும் எனது தலைமேல் பதிந்து (திருவடி தீட்சை தந்து)
- சிற்றறிவு பேரறிவாகத் திகழ்வதே (சமாதி கூடுவதே) என்றைக்கும் உள்ள பழக்கம் என்று கூறினாய்.

- மனதில் ஆராய்ச்சி இல்லாமல் இருப்பதும்.
- முத்தி நிலையில் ஒன்று, இரண்டு என்று சொல்லாமலும்.
- ஒளி என்றும், வெளி என்றும். உருவம் என்றும், நாதம் என்றும், எதனையும் மனதில் கொள்ளமலும்.
- எந்த வகை சாதனமும் இன்றி,
- ஊனக் கண் கொண்டு பாராமல் ஞானக்கண் கொண்டு பார்ப்பதே அனபவம் (அனுபூதி) வாய்க்கும் உபாயம் என்று உணர்த்தியதனை அறிந்து கொள்ளாமலும்

“சுத்தாத்துவித நிலையில் முன்னமே நின்று கொண்டிருக்கும் பழைய அடியார்கள், பெற்ற வீடுபேறு நிலையில் நிற்க ஐயனே! அருள்புரிய வேண்டும்.” என வேண்டுகிறார் தாயுமானவர்.

வீடுபேறு நிலையில் நிற்க முதலில் நாம் “முழுமைப்பேறு” எய்த வேண்டும் என்ற வலியுறுத்துகிறது வேதாத்திரியம்.

நிறைவடைந்த குருமூலம் நேர்முகமாய்க்
குண்டலினி யோகம் கற்று,
நித்தவம் ஆழ்ந்தாற்றி, உண்மை
உணரப்பெற்றால் முனைப்பு போகும்.

இறைவனது பகுதிநிலை உயிர் மனமாய்த்
தேர்ந்து, அதன் உறைவிடமாம்
உடலதுவோ சமுதாயம்உற்பத்தி
செய்துபல பொருட்கள் ஈந்து,

முறையாக வளர்த்து பண்பாட் டுடனே
கல்வி தொழில் காப்பு தந்த
முழுக்கதையும், சிந்தனையின் முதிர்ச்சி யினால்
உணர்ந்து. வினைப்பதிவாய்ப் பெற்ற
கறைநீங்க, உயிரதனை இறை நிலைக்கும்
கனஉடலைச் சமூகத்திற்கும்
கனிவடனே அர்ப்பணிக்கும் தகைமை
வரும். இந்நிலையே முழுமைப்பேறாம்!”
(ஞாக.பா.1497)

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருக்கின்ற நான், தனது என்ற தன்முனைப்பால், தனது சுயம் தெய்வீகம் என்பதையும், இறைநிலையில் ஒரு பகுதியாகத் தான் உள்ளதையும் மறந்து, துன்புற்று வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

தன்னை அறிந்து, இறைநிலையை உணர்ந்து, தன்னிறைவடைந்த அருட்குருவிடம் நேரடியாக உயிர்மேல் மனம் செலுத்துகிற குண்டலி னி

யோகம் கற்றுக் கொண்டு, தினந்தோறும் தவம் செய்து வந்தால் உண்மை உணரப்பெற்று இறை முனைப்பை மலர்ச்சி பெற்று தன்முனைப்பானது ஒழிந்துவிடும்.

இறைநிலையின் ஒரு பகுதியான உயிரை, மனமாகத் தெரிந்து கொண்டு, அதன் வசிப்பிடமாகிய உடலை பல வாழ்வியல் தேவைப் பொருட்களை உற்பத்தி செய்து சமுதாயம் கொடுத்து வளர்த்துள்ள என்ற உண்மை விளங்கும்.

உடலை முறையாக வளர்த்தது போலவே கல்வி, தொழில், காப்பு ஆகியவற்றையும் கொடுத்து மனிதப் பண்பாகிய இட்டுண்டு, ஒத்தும் உதவியும் வாழக்கூடிய அறிவையும் சமுதாயம் கொடுத்துள்ளது என்பதையும் சிந்தனை ஆற்றலின் முதிர்ச்சியினால் தமது முழுக்கதையையும் விளங்கிக் கொள்ளலாம்.

உண்மைகளை மறந்து பல பிறவிகளிலும் வினைப்பதிவுகளால் களங்கமுற்றுள்ள ஆன்மீக கறைகளை நீக்கிக் கொள்ள, சமுதாயம் தந்த பரு உடலை சமுதாயத்திற்கும், இறைநிலையின் பகுதியான உயிரை இறைநிலைக்கே கனிவுடன் அர்ப்பணிக்கின்ற சிறப்பு இயல்பாகவே மனிதனில் மலர்ச்சியுறும்.

இந்நிலை கைவரப் பெறுவதுதான் முழுமைப்பேறு ஆகும். மனிதன் அடைய வேண்டிய பெரும்பேறு இதுவேயாகும். இத்தகைய முழுமைப் பேற்றை அடைந்து வீடுபேற்று நிலையை அடைவோமாக!

## 10. என்னை ஆட்கொள்வாயா?

திருமாலால் அறியப்படாத அடியினையும், பிரம்மனால் காணமுடியாத முடியினையும் உடைய அண்ணாமலையானை நாம் அறிவோம் எனும் வெற்றுரையைத் தேன் போல் பேசும் வஞ்சகியே.
உன் வாசற் கதவைத் திறப்பாயாக.

நிலவுலகு, வானுலகு, பிறஉலகு என அனைத்துலகிலும் உள்ளோராலும் அறியமுடியாத அரியவன் இறைவன்.

அவனுடைய அருட் கோலத்தையும் நம்மை ஆட்கொள்ளும் அருட்சீலத்தையும், பாடி சிவனே, சிவனே என நாங்கள் அலறுவதைக் கேட்டும் நீ துயில் எழ மறுக்கிறாய். மணங்கமழும் கூந்தலைக் கொண்ட நங்கையே! இதுதானோ உன் தன்மை?

“மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போல்அறிவோம் என்றுஉள்ள பொக்கங்க ளேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவுஅரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டு அருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசு ஏலோர் எம்பாவாய்” (திருப்பாவை)

ஆண்டாளைப் போலவே தாயுமானவரும், “தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்று இறைவனிடம் வேண்டுகிறார்.

“போதமாய் ஆதிநடு அந்தமும் இலாததாய்ப்
புனிதமாய், அவிகாரமாய்ப்
போக்குவரவு இல்லாத இன்பமாய் நின்றநின்
பூரணம் புகலிடம்தா

ஆதரவு வையாமல் அறிவினை மறைப்பதுநின்
அருள். பின்னும் அறிவு இன்மை தீர்த்து
அறிவித்து நிற்பதுநின் அருளாகில் எளியனேல்
அறிவு ஆவது ஏது அறிவு இலா

ஏதம்வரு வகை ஏது வினை ஏது வினைதனக்கு
ஈடுஆன காயம் ஏது என்
இச்சா சுதந்தரம் சிறிதும் இலை. இகபரம்
இரண்டினுள் மலைவுதீரத்

தீது இல் அருள் கொண்டு இனி உணர்த்தி எனை ஆள்வையோ?
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.” (தா.பா.35)

- ஞான வடிவமாயும்.
- தொடக்கமும் நடுவும் முடிவும் இல்லாததாயும்.
- தூயதாயும்.
- திரிவுபடாததாயும்.
- பிறப்பு இறப்பு இல்லாததாயும்.
- இன்பமாயும்.
- விளங்கும் வீடுபேற்றினைத் தந்து அருளாமல்,
- எனது அறிவினை மறைந்து நிற்   பது நினது அருளின் செயலே.
- அதன்பிறகு அந்த அறியாமையைப் போக்க. அறிவித்து நிற்பதும் நினது அருளின் செயலே.
- அவ்வாறு இருக்க, எளியேனது அறிவு என்பது எது?

- அறிவில்லாமையால் குற்றம் வரும்என்பது ஏது?
- வினை எங்கிருந்து வரும்?
- வினைக்கு ஈடாகத் தரப்படும் உடம்பு எங்கிருந்து வரும்?
- எனவே இதனில் எனது அன்பு என்னும் தலைமை சிறிதும் இல்லை.
- இம்மை, மறுமை ஆகிய இரண்டு நிலையிலும் ஏற்படும் மயக்கத்தைப் போக்கி,
- குற்றமற்ற நினது திருவருளைத் துணையாக்கி,

"எனக்கு உணர்த்த வேண்டியதை உணர்த்தி, ஏற்றுக் கொள்வாய் அல்லவா? என இறைவனிடம் கேட்கிறார் தாயுமானவர்.

நம்மையும் ஏற்றுக் கொண்டு இன்பத்தை கொடுக்கும் இறைவன் தரும் இன்ப நிலையை எய்த வாரீர்!" என அழைக்கிறது வேதாத்திரியம்.

"அறிவானது நிறை நிலையை ஆதியாக
  அமைதி நிலையில் உணர்ந்து. அதுவாம் போது
அறிவு உயர்ந்தகன்று, அமைதிப் பேரின்பத்தில்
  அணுமுதலாய் அண்ட கோடி தானேயாக,
அறிவே அவ்வந் நிலையில் ஒழுங்கியக்க
  அமைப்பாகி, முறைபிறழாது இயங்கும் மேலாம்
அறிவின் பெருமை உணர்ந்த இன்ப வெள்ளத்து
  ஆனந்தத்தில் திளைக்க வாரீர்! வாரீர்!" (ஞாக.பா.1236)

மனிதனின் இருப்பாக தரமாக உள்ள அறிவானது நீடித்தும், நிலைத்ததுமான, ஆதியிலே இருந்த அமைதி நிலையை உணர வேண்டும்.

சிற்றறிவு பேரறிவில் மையமாகிற நிலையில் அறிவானது உயர்வு பெற்று, விரிவு பெற்று, அந்த அமைதிப் பேரின்ப நிலையில் அணு முதல் அகன்ற பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் தானாகவே உணர்ந்து கொள்கிறது.

அறிவானது சடப்பொருட்களிலும் சீவ இனங்களிலும் அதனதன் நிலைகளுக்கேற்ப ஒழுங்காக இயங்கக்கூடிய அமைப்பும் ஆகி, வழிமுறைகள் தவறாது நடைபெறுவதையும் உணர்ந்து கொள்கிறது.

உண்மைப் பொருளே மேன்மையாக எல்லாவற்றறிலும் இருந்து. இயக்கிக், காத்து, முடித்தும் வைக்கிறது என்ற உண்மைகளை உணர்ந்து. அந்த பேரின்ப வெள்ளத்தில் பேரானந்த நிலையில் மகிழ்ந்து திளைக்க வாரீர்.

# 11.ஞானம் முதிராமல் வீடு கைகூடுமோ?

அது ஒரு பெரிய குருகுலம். பல ஜென் துறவிகள் அங்கு தங்கியிருந்து கல்வி பயின்று வந்தனர்.

குருகுலத்தில் இருந்த தலைமை குருவுக்கு மிகவும் வயதாகிவிட்டது. அதனால் அவர் படுத்த படுக்கையாக இருந்தார். அவரிடம் தலைமை சீடன் ஒருவர் இருந்தார்.

ஒரு நாள் தனது கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, அமைதியாக அமர்ந்திருந்தார், தலைமை சீடன்.

அப்போது தலைமை குரு, அவரை அழைப்பதாக தகவல் வந்தது. இதையடுத்து அவர், குருவின் அறையை நோக்கிச் சென்றார்.

அறைக்குள் குளிரை தாங்க முடியாமல், போர்வையால் போர்த்திய நிலையிலும் நடுங்கியபடி அமர்ந்திருந்தார் குரு. அவருக்கு எதிரில் விறகுகள் குவித்து, நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.

தனது சீடனைப் பார்த்ததும், 'உட்கார்' என்று சைகை காட்டினார், குரு. தொடர்ந்து அவரும், படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தார்.

குருவானவர் பேச்சைத் தொடர்ந்தார். 'என்னை வயோதிகம் வாட்டி எடுக்கிறது.

உடலில் தள்ளாமை ஏற்பட்டுவிட்டது. என்னுடைய சீடர்களிலேயே நீ தான் முதன்மையானவன்.

எனவே எனக்குப் பிறகு, இந்த குருகுலத்தை ஏற்று நடத்தும் பொறுப்பை நீதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றார் தலைமை குரு.

அதை ஏற்றுக்கொள்வது போல், தலைமை சீடன் அமைதியாக தலையாட்டினார். இதையடுத்து குரு தன் அருகில் இருந்த புத்தகத்தை எடுத்து சீடனிடம் நீட்டினார்.



‘இதை வாங்கிக்கொள். இது ஒரு அரிய பொக்கிஷம். உனக்கு இந்த புத்தகம் நல்வழியைக் காட்டும்’ என்று கூறி அதை வழங்கினார்.

ஆனால் தலைமை சீடனோ, அதை வாங்க மறுத்தார். ‘எனக்கு இது வேண்டாம் குருவே’.

தன் சீடன் இந்த புத்தகத்தின் வலிமை தெரியாமல் மறுக்கிறான் என்று நினைத்த குரு, மீண்டும் அவனிடம் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வலியுறுத்தினார்.

அதற்கு தலைமை சீடன், ‘இல்லை குருவே.. எனக்கு தேவையானதையெல்லாம் தாங்கள் எப்போதோ கற்பித்துவிட்டீர்கள். இது எதற்கு?’ என்று கூறி மீண்டும் மறுத்தார்.

ஆனால் குரு, ‘அப்படிச் சொல்லாதே. இது வேத நூல். பல தலைமுறைகளாக இந்த புத்தகம், நம்முடைய மடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது’ என்றார்.

தலைமை சீடன் அப்போதும் குரு கொடுத்த புத்தகத்தை ஏற்கவில்லை.

உடனே குரு, தன்னுடைய சீடனைப் பார்த்து கேட்டார். ‘பசி வந்தால் உணவுக்கு என்ன செய்வாய்?’.

‘பாத்திரத்தை எடுத்துக் கொண்டு யாசகம் பெற புறப்படுவேன்’ என்றார் தலைமை சீடன்.

‘சரி.. ஒருவர் பிட்சையிடும்போது என்ன வேண்டும் என்று கேட்பாய்?’ என்று அடுத்த கேள்வியை முன் வைத்தார் குரு.

தலைமை சீடனோ, ‘எதுவும் கேட்கமாட்டேன். அவர்கள் இடுவதை பெற்றுக்கொள்வேன்’ என்றார்.

‘அப்படி உன் பாத்திரத்தில் இடப்பட்ட பிட்சையாக இதை வைத்துக் கொள்’ என்று கூறி புத்தகத்தை நீட்டினார், அந்த மடத்தின் குரு.

மௌனமாக அந்த புத்தகத்தைப் பெற்றுக் கொண்ட தலைமை சீடன், அடுத்த நொடியே தன் கையில் இருந்த புத்தகத்தை அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் தூக்கிப் போட்டார்.

பதறிப்போனார் குரு. ‘அடப்பாவி.. என்ன காரியம் செய்து விட்டாய்?’ என்று அலறினார்.

இப்போதும் அமைதியாக பதிலளித்தார் தலைமை சீடன். ‘பிட்சை அளித்த யாருமே, தாங்கள் போட்ட பிச்சை என்ன ஆனது என்று பார்ப்பதில்லை குருவே.

அதுவும் இல்லாமல் ஞானம் என்பதே நெருப்புதானே. நெருப்பு நெருப்புடன் சேர்ந்துவிட்டது. வேதம் என்பது வெறும் எழுத்துக்கள். இவற்றிலா இருக்கிறது ஞானம்?’ என்றார் தலைமை சீடன்.

தன்னுடைய சீடன் தன்னை விடவும், பெரும் ஞானம் அடைந்தவன் என்பதை அந்த வார்த்தைகளில் இருந்து உணர்ந்து கொண்டார் குரு.

இத்தகைய ஞானம் முதிர்ந்தால் வீடுபேறு கைகூடும் என்பதை தாயுமானவர் இப்பாடலில் சொல்லுகிறார்.

“பக்திநெறி நிலைநின்றும், நவகண்ட பூமிப்
பரப்பைவலம் ஆகவந்தும்
பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
பசிதாகம் இன்றி எழுநா

மத்தியிடை நின்றும், உதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்கு அடைத்து
மௌனத் து இருந்தும், உயர் மலைநுழை தனில் புக்கும்
மன்னுதச நாடிமுற்றும்

சுத்திசெய்தும்மூல ப்ராணனோடு அங்கியைச்

சோமவட் டத்து அடைத்தும்
சொல்அரிய அமுது உண்டும், அற்ப உடல் கற்பங்கள்
தோறும்நிலை நிற்கவீறு

சித்திசெய் தும், ஞானம் அலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே."
(தா.பா.36)

- பக்திநெறியில் சிறந்து நின்றும்.
- ஒன்பது பிரிவுகளாக விளங்கும் இந்நிலவுலகம் முழுவதிலும் தலயாத்திரை செய்தும்.
- கடலிலும் புனித நதிகளிலும் தீர்த்தம் ஆடியும்.
- பசி, தாகம் ஆகிய இவற்றைப் பொருட்படுத்தாது, ஏழு நாக்குகளுடன் கூடிய தீயின் நடுவில் நின்று தவம் செய்தும்,
- உதிர்ந்த சருகு, நீர், காற்று ஆகிய இவற்றை மட்டுமே பசியைப் போக்கும் உணவாக உட்கொண்டும்.
- மௌன விரதம் இருந்தும்.
- மலைக் குகைளில தங்கித் தவம் இயற்றியும்.
- நிலைபெற்று விளங்கும் பத்து நாடிகளைச் சுத்தி செய்தும்.
- பிராணனால் மூலாதாரத்தில் அக்கினி மூட்டி,
- அங்கு வெளிப்படும் ஆற்றலை சந்திர மண்டிலத்துக்குக் கொண்டு சென்று,
- அங்கு ஊறும் அமுதத்தைப் பருகியும்.
- அற்பமான உடல் பல கற்ப காலங்கள் நிலைத்து நிற்கும்படி காயசித்தி செய்தும்.

"ஞானம் முதிராமல் வீடு கைகூடுமோ?" எனக் கேட்கிறார் தாயுமானவர். "ஞானமும் – முக்தியும்" ஒருமைத் தத்துவம் அறிந்தால் கிடைத்துவிடும் என்கிறது வேதாத்திரியம்.

"தவபலமும், தனையறிந்த நிலையும் கொண்டு
தனையடைந் தோர்க்கருள்புரியும் தகைமை யுள்ள
சிவநிலையோன் மெய்ஞ்ஞானி குருவாய் நின்று.
சீடனது புருவமையம் விரலால் தீண்ட,
அவனிலவன் லயமாகி ஆசான் தொட்ட,
அவ்விடத்தே ஞாபகத்தை ஒன்றி ஒன்றி,
உவமையிலாப் பேரின்பம் உள் உணர்ந்து,
ஒருமைத் தத்துவம் அறிந்தால், அதுவே முக்தி." (ஞாக.பா.1464)

அறிவை அறிவால் அறிந்த தெளிவே ஞானம் ஆகும். தன்னிலே எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் தன்னையும் உணரக் கூடியதான பேரறிவில் சிற்றறிவு அடக்கம் பெற்ற நிலை முக்தி, மோட்சம், முழுமைப்பேறு ஆகும்.

தவத்தின் மூலம் அந்நிலை கைவரப்பெற்று, தன்னை அறிந்த நிலையும் கொண்டு, தன்னை அண்டியவர்க்கும், அந்நிலையை உணர்த்தக்கூடிய தகைமை உடையவரே சிவநிலை அடைந்த மெய்ஞானி ஆவார்.

அப்படிப்பட்ட மெய்ஞான அருட்குரு சீடனது புருவமையத்தை விரலால் தொட, சீடனானவன், தன்னில் தானே லயமாகி ஆசான் தொட்ட இரு புருவ மையத்தில் எந்நேரமும் நினைவை நிறுத்தி ஒன்றி ஒன்றி இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்துவந்தால், உவமை கூற முடியாத பேரின்ப நிலையை உள் உணர்வாகப் பெற்று ஒன்றே எல்லாமாகவும், எல்லா வற்றிலும் அந்த ஒன்றே இருக்கிறது என்ற ஒருமைத் தத்துவத்தை அறிந்து அனுபவமாகக் கொண்டால் அந்நிலையே முக்தி, மோட்சம், முழுமைப்பேறு ஆகும்.

ஞானம் என்பது அறிந்து கொள்வது. அறிந்து கொண்டதை அனு பவமாக்கிக் கொள்வது முக்தி ஆகும்.

# துணைநின்ற நூல்கள்.


1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. உலக சமாதானம், , வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.

8. திருப்பாவை பாடல்கள், ஆண்டாள்.
9. ஜென்னும் வேதாத்திரியமும், மன்னார்குடி பானுகுமார், இணையதளம், www.banukumar.in